**செய்தி வெளியீடு எண்: 392/2019 நாள்: 16.12.2019**

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையம் கூட்ட அரங்கில் நடைபெற்ற மக்கள் குறை கேட்பு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது!**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையம் கூட்ட அரங்கில் வாராந்திர மக்கள் குறை கேட்பு நாள் கூட்டம் இன்று (16.12.2019) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு கோரிக்கை மனுக்களை பொதுமக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, ஓய்வூதியத்தொகை. வீட்டுமனைப்பட்டா, பசுமை விடுகள், திருமண உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, இந்திராகாந்தி தேசிய விதவை உதவித்தொகை ஆகிய பல கோரிக்கைகள் அடங்கிய 210 மனுக்கள் வரப்பெற்றன. அவை அனைத்ததையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரைத்து மேல் நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மனுக்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில், வருவாய்த் துறை சார்பாக சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சார்பாக 6 நபர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக ஒரு மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ரூ.13,500/- மதிப்புடைய மூன்று சக்கர நாற்காலியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். மேலும் அரசு ஆதரவற்றோர் பள்ளியை சேர்ந்த 44 மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அட்டையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக பணியின் போது காலமான 2 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்.சுந்தரமூர்த்தி, சார் ஆட்சியர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.டி.ஸ்ரீதர், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.மாலதி, முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அலுவலர் திரு.மணிகண்டன் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்.**